தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1980 ஜூலை 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. ''

எத்தகைய ஆற்றல் ஒருவர் பெற்றிருந்தாலும் செயலாற்றும் திறனற்றவராக அவர் இருப்பாரேயானால் அவரை இந்த உலகம் விரும்பாது.

1. அறிவிப்புகள்.

ஆளுநர் செய்தி—ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

I have received with great satisfaction your resolution of thanks for my address on the 21st June 1980 to the members of the Legislature.

2. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் வழங்கப் பெறாமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய வேலைகள் நடைபெற்று வரும் இந் நாள்வரை, விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் வழங்காதது

குறிப்பு : ஓர் உறையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.